ஸ்ரீ ரஸ்து.

ஸ்ரீ மதே ராமாநுஜாய நம:

ஈட்டு ஸ்ரீஸூக்தியை மாறுபாடாக வெடுத்துக்
காட்டியும் தவறான பொருளை வரைந்தும்
சேஷாபத்தை விளைத்த சென்னை
அட்வகேட் ஒருவரைத்
தெளிவிக்கவேண்டி

ஸ்ரீகாஞ்சீ பிரதிவாதி பயங்கரம்
அண்ணங்கராசாரியர் எழுதிய

"ஒரு மிதுனமே உத்தேச்யம்"

என்னும் வியாஸம்.

திருவல்லிக்கேணி M. W. N. பிரஸ்ஸில் அச்சிடப்பட்டது.

கிடைக்குமிடம்:

P. B. ANNANGARACHARYA,

L. KANCHEEPURAM

சோபக்ருத் ஹூ தேவப்பெருமாள் திருத்தேர்.

9—6—1963

''ஒரு மிதுனமே உத்தேச்யம்''

ஸ்ரீகாஞ்சீ பிரதிவாதி பயங்கரம்
அண்ணங்கராசாரியர்

❁❁❁❁❁❁❁❁❁❁❁❁❁❁❁❁❁❁❁❁❁❁❁❁❁❁❁❁❁

1. இவ்வுலகின்கணுள்ள எண்ணிறந்த மதங்களுள், பெருமானும் பிராட்டியுமாகிற திவ்ய தம்பதிகளை [ஒரு மிதுனத்தை]த் தஞ்சமாகக் கொள்ளுங் கொள்கை ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாயத்தினர்க்கே அஸாதாரணமென்று சொல்லலாம். சித்தும் அசித்தும் ஈச்வரனுமாக ஒப்புக்கொள்ளப்பட்ட தத்வத்ரயத்தினுள் சித்து என்பது சேதநர்களே. சேதநவர்க்கமானது பத்தர் முக்தர் நித்யர் என்று மூன்று வகுப்பாகப் பிரியலுற்றது. ஸம்ஸாரிகள் பத்தரெனப்படுவார்; அநாதியான அசித் ஸம்பந்தத்தினால் கட்டுண்டு கிடப்பவர்களென்றபடி. இதில் நின்றும் விடுபட்டு முக்தி யடைந்தவர்கள் முக்தரெனப்படுவார். ஒரு நாளும் இந்த ஸம்ஸார நிலத்தில் கால் வையாமல் நித்ய விபூதி யென்கிற திருநாட்டிலேயே நித்ய கைங்கரியத்திலீடுபட்டு வாழும் சேஷ சேஷாசந கருட ப்ரமுகர்கள் நித்யர்கள் (அல்லது) நித்ய ஸூரிகள் எனப்படுவார்.

2. ஆக பத்த முக்த நித்ய ரூபேண மூன்று படிப்பட்ட சேதந வர்க்கத்தில் முமுக்ஷுவென்கிற ஒரு வகுப்பும் அங்கீகரிக்கப்படுகிறது. பந்தத்தில் நின்றும் விடுபடவேணுமென்கிற ருசி யுடையார்களே முமுக்ஷுக்களெனப்படுவார். இவர்களும் ஸம்ஸாரிகளாயிருக்கச் செய்தேயும் ஸம்ஸார பந்தத்தினின்றும் விடுபட வேணுமென்கிற ருசியுடைமை இவர்களுக்குத் தன்னேற்றம். இது காரணமாகவே இவர்களுக்கு முமுக்ஷுக்களென்கிற சிறப்புப் பெயர் வாய்த்தது. இந்த வ்யபதேசம் 'मुमुक्षुर्वै शरणमहं प्रपद्ये = முமுக்ஷுர்வை சரணமஹம் ப்ரபத்யே'' இத்யாதிகளான உபநிஷத் வாக்யங்களிலேயே ஏறிக்கிடக்கிறது. முமுக்ஷுக்களென்று பெயர் பெற்றவர்கள் முக்கியமாக மூன்று ரஹஸ்யங்களை யறிய வேண்டும், திருமந்த்ரம், த்வயம், சரமச்லோகம் என்பன மூன்று ரஹஸ்யங்கள் இவற்

றுள் திருவஷ்டாக்ஷர மஹாமந்த்ரமே திருமந்த்ரமெனப் படும். அடுத்த த்வய மந்த்ரத்திற்கு மந்த்ர ரத்னமென்று வ்யபதேசம். இதற்கு அநுஸந்தான ரஹஸ்யமென்றும் ஒரு பெயருண்டு. ஸதா அநுஸந்தானத்திலிருக்க வேண்டிய ரஹஸ்யமென்பது பொருள். இப்பெயர் ஆசார்ய ஹ்ருதயத்தில் கையாளப்பட்டுள்ளது. அதில் மூன்றாவது ப்ரகரணத்தில் "இவற்றுக்கு மந்த்ர வித்யநுஸந்தான ரஹஸ்யங்களோடே சேர்த்தி" என்கிற சூர்ணை காண்க.

3. மற்றை யிரண்டு ரஹஸ்யங்களிற் காட்டிலும் த்வயமென்னும் ரஹஸ்யம் மிகச் சிறந்தது. இதற்கு முக்கியமாக இரண்டு காரணங்களுண்டு. திருமந்திரத்திலும் சரமச்லோகத்திலும் பிராட்டியைப் பற்றின பேச்சு கிடையாது; திருமந்திரத்தில் அகாரத்தின் பொருளை விவரித்தருளும் பிள்ளை லோகாசாரியர் "ரக்ஷிக்கும்போது பிராட்டி ஸன்னிதி வேண்டுகை யாலே இதிலே ஸ்ரீஸம்பந்த மநுஸந்தேயம்" என்றருளிச் செய்திருக்கையாலே பிராட்டிக்கு வாசகமான சப்தம் திருமந்த்ரத்தில் கிடையாதென்பது தேறிற்று. சரமச்லோகத்தில் பிராட்டியைப் பற்றின ப்ரஸ்தாவமே கிடையாது. த்வயத்திலோ வென்னில் பூர்வ வாக்ய மென்றும் உத்தர வாக்யமென்றும் இரண்டு கண்டங்களுள்ளன வன்றோ; இரண்டிலும் முகப்பில் பிராட்டிக்கு வாசகமான ஸ்ரீ சப்தம் அமைந்திருப்பது ஒரு விசேஷம். ஸ்தநந்தய ப்ரஜைக்குத் தாயினுடைய அவயவங்களெல்லாங் கிடக்க ஸ்தனமென்னும் அவயவமே உத்தேச்யமாகிறாப் போலே ப்ரபந்நர்களான சேதநர்க்கு எம்பெருமானுடைய திருவடியே பரமோத்தேச்யமாகின்றது. இத்திருவடியின் ப்ரஸ்தாவம் மற்றை யிரண்டு ரஹஸ்யங்களிலின்றிக்கே இந்த த்வய ரஹஸ்யத்தில் மட்டுமே யிருப்பது மற்றொரு விசேஷம். ஆக இவ்விரண்டு சிறப்புகளும் த்வயத்தின் ஏற்றத்தைத் தாபிக்கின்றன.

4. பூர்வ கண்டம், உத்தர கண்டம் ஆகிய இரண்டு கண்டங்களினுடையவும் முகப்பில் பிராட்டிக்கு வாசகமான ஸ்ரீ சப்தமிருப்பதாகச் சொன்னோம். இஃது இரண்டிடத்தில் எதற்காக விருக்கிறது? இரண்டிடத்திலும் பொருள் ஒன்றே தானா? அன்றி வெவ்

வேறுபட்டுள்ளதா? என்கிற விசாரம் இங்குத் தோன்றக் கூடியது. இதைப் பற்றிச் சொல்லுகிறோம். கேண்மின். இரண்டிடத்திலும் 'ஸ்ரீ' என்கிற சொல் தனிப்பட்டிருக்கவில்லை 'மதுப்'பென்கிற ஒரு ப்ரத்யயத்தோடே கூடி நாராயணனுக்கு அடைமொழியாக இருக்கின்றது. முற்கூற்றில் 'ஸ்ரீமந் நாராயண' என்றும், பிற்கூற்றில் 'ஸ்ரீமதே நாராயணாய' என்று முள்ளது. *அகலகில்லேனிறையு மென்று அலர்மேன் மங்கையுறை மார்பா!* என்று நம்மாழ்வாரருளிச் செய்துள்ளபடியே ஒரு நொடிப் பொழுதும் விட்டுப் பிரியமாட்டேனென்றிருக்கிற பெரிய பிராட்டியாரோடே கூடியிருந்துள்ள நாராயணனுடைய திருவடிகளைத் தஞ்சமாகப் பற்றுகிறேன் என்பது முற்கூற்றின் பொருள். இனி பிற்கூற்றின் பொருளாவது, பெரிய பிராட்டியாரோடே கூடியிருந்துள்ள நாராயணனுக்கு எல்லா வடிமைகளும் செய்யப் பெறுவேனாக வேணும், அதனாலுண்டாகும் மகிழ்ச்சியில் எனக்கு யாதோர் அந்வயமும் இல்லாதிருக்க வேணும்—என்பதாம்.

5. முன்னம் முற்கூற்றின் பொருளை நன்றாக சோதித்தநுபவித்து விட்டு, பின்னை பிற்கூற்றின் பொருளை யநுபவிப்போம். இரண்டையும் சேர்த்து மநுபவிப்போம்.

ஸ்ரீ என்னுஞ் சொல்லுக்கு ஸம்பத்து முதலானவையும் பொருளாக இருந்தாலும் இங்குப் பெரிய பிராட்டியாரென்னும் பொருளே கொள்ளப்படுகிறது. *ஸ்ரீரிதி ப்ரதமம் நாம லக்ஷ்ம்யா:—श्रीरिति प्रथमं नाम लक्ष्म्याः* என்பது இதற்கு ப்ரமாணம். *லக்ஷ்மீ: பத்மாலயா பத்மா கமலா ஸ்ரீர் ஹரிப்ரியா—लक्ष्मीः पद्मालया पद्मा कमला श्रीर्हरिप्रिया* என்பது அமரகோசம். *ஸ்ரீரித்யேவ ச நாம தே—श्रीरित्येव च नाम ते* என்றார் ஆளவந்தாரும். இந்த ஸ்ரீ சப்தத்திற்கு ஆறுவகையான வ்யுத்பத்திகள் கொள்ளப்பட்டு அவற்றுக் கிணங்க ஆறு பொருள்கள் கொள்ளப்படுகின்றன. முக்கியமாக இரண்டு வ்யுத்பத்திகளையும் இரண்டு பொருள்களையும் கொள்வர். "ஸ்ரீயதே இதி ஸ்ரீ:; ச்ரயதே இதி ஸ்ரீ:—श्रीयते इति श्रीः; श्रयते

इति श्री:", எல்லாராலும் ஆச்ரயிக்கப்படுகின்ருள் என்பது முதல் வ்யுத்பத்தியில் கிடைக்கும் பொருள். தான் எம்பெருமானை ஆச்ரயிக்கிருளென்பது இரண்டாவது வ்யுத்பத்தியினுல் கிடைக்கும் பொருள். கேட்பாரற்ற ஸ்வதந்திரனுகிய எம்பெருமான் எங்கள் குற்றங்களைக் கண்டு சீறியருளாதபடி புருஷகாரக்ருத்யம் பண்ணி எங்களை அவனோடே சேர்ப்பிக்க வேணுமென்று வேண்டிக்கொள்ளும் சேதனர்களால் ஆச்ரயிக்கப் பட்டு, அந்த வேண்டுகோளை நிறைவேற்றுதற்காகத் தான் எம்பெருமானை யணுகி உகப்பிக்குமவள் என்பது இரண்டு வ்யுத்பத்திகளினுலும் தேறிற்ருகும். ஆகவே, புருஷகார க்ருத்யத்திற்காகப் பிராட்டியை முன்னம் பற்றுவதாகத் தேறி கின்றது. 'ஸ்ரீமந் நாராயண சரணௌ' என்று முழுச் சொல்லாக இருந்தாலும், ஸ்ரீயி னுடையவும் நாராயணனுடையவும் திருவடிகளை என்று பிரித்துப் பொருள் கொள்வர் நம் பூருவாசாரி யர்கள்.

6. இதற்குப் பிரமாணமாக எம்பெருமானுர், பட் டர், வேதாந்தவாசிரியர் ஆகிய மூவருடைய ஸ்ரீஸூக்தி களைக் கொள்வோம். எம்பெருமானுர் அருளிச் செய்த சரணுகதி கத்யம் இந்த த்வயத்திற்கு விவரணமென்று வியாக்கியானித்தருளுகிருர் வேதாந்தவாசிரியர். அந்த சரணுகதி கத்யத்தில் தொடக்கத்தில் *பகவந்நாராய ணுபிமதாநுரூப......அசரண்ய சரண்யாம் சரணமஹம் ப்ரபத்யே= भगवन्नारायणाभिमतानुरूप....अशरण्य शरण्यां शरण महं प्रपद्ये* என்று பிராட்டியின் ப்ரபத்திபரமான வாக் கியம் தனிப்பட்டுள்ளது. அதற்கு மேல் ஐந்தாவது வாக்கியத்தினுல் [*அகில ஹேயப்ரத்யநீக...ஸ்ரீமந்நாரா யண! த்வத்பாதாரவிந்த யுகளம்,...சரணமஹம் ப்ர பத்யே =अखिल हेयप्रत्यनीक...श्रीमन्नारायण! त्वत्पादारविन्द युगलं-शरणमहं प्रपद्ये* - என்பதனுல்] எம்பெருமானை நோக்கிப் பண்ணப்படுகிற ப்ரபத்தி தனியே கூறப்பட்டது. இங்கு முதலில் அநுஷ்டிக்கப்பட்ட பிராட்டி ப்ரபத்தி யானது புருஷகார ப்ரபத்தி யென்றும் பிறகு செய்யப் படுகிற பகவத் ப்ரபத்தி உபாயவரணமென்றும் மூலத்

திலேயே ஸ்பஷ்டமாக அறியக் கிடப்பது தவிர, கத்ய பாஷ்யத்தில் வேதாந்தவாசிரியராலும் ஸ்பஷ்டமாகக் காட்டப்பட்டுள்ளது.

7. பட்டர் ரஹஸ்யத்ரய விவரணமாக அருளிச் செய்த அஷ்டச்லோகியில் (5, 6.) *நேத்ருத்வம் நித்ய யோகம்=नेतृत्वं नित्य योगं* *ஈசாநாம் ஜகதாம் ईशानां जगतां* என்கிற இரண்டு சுலோகங்களிலும் பிராட்டியை ஆச்ரயிப்பது புருஷகாரத்வேந என்று வ்யக்தமாக விளக்கப்பட்டுள்ளது. இதைச் சிறிது விவரிப்போம். (ச்லோ. 5ல்) நேத்ருத்வம் என்றது புருஷகாரத்வம் என்றபடி. *नेतृत्वं नित्ययोगं समुचित गुणजातं तनुख्यापनं चोपायं कर्तव्य भागम्—நேத்ருத்வம் நித்யயோகம் ஸமுசித குணஜாதம் தநுக்க்யாபநம் சோபாயம் கர்த்தவ்ய பாகம்* என்னுமளவால் பூர்வ கண்டத்தின் ப்ரமேயத்தைக் காட்டிவிட்டு, *अथ मिथुनं परं प्राप्यम्—அத மிதுநம் பரம் ப்ராப்யம்* என்று தொடங்கி உத்தரகண்டத்தின் பொருளைக் காட்டியருளுகிறார். மேல் (ச்லோ. 6ல்) *ईशानां जगतामधीशद यितां नित्यानपेतां श्रियं संश्रित्य—ஈசாநாம் ஜகதாமதீசதயிதாம் நித்யாநபேதாம் ச்ரியம் ஸம்ச்ரித்ய* என்னுமளவால் புருஷகார ப்ரபத்தியைத் தனிப்படக் காட்டி, மேல் *अङ्घ्री हरेराश्रये அங்க்ரீ ஹரேராச்ரயே* என்பதனால் உபாயவரணத்தைத் தனிப்படக் காட்டி, அதற்கு மேல் *श्रिया च सहितायात्मेश्वरायार्थये—ச்ரியா ச ஸஹிதாயாத்மேச்வராயார்த்தயே* என்று தொடங்கி இருவருமான சேர்த்தியிலே கைங்கரியம் செய்யவேணுமென்று பிரார்த்திப்பது உத்தரகண்டத்தின் பொருளாகக் காட்டப்பட்டுள்ளது.

8. ஆக, புருஷகாரமாகப் பிராட்டியை ஆச்ரயித்தல், உபாயமாக எம்பெருமானை யாச்ரயித்தல், இருவருமான சேர்த்தியிலே அடிமை செய்ய விரும்புதல் ஆகிய மூன்று விஷயங்கள் இரண்டு கண்டங்களாக அமைந்த த்வயத்தின் பிரமேயம் என்று விளக்கப்பட்டதாயிற்று. இதை இவ்வண்ணமாகவே கத்யபாஷ்யத்தில் வேதாந்த

குருவும் விளக்கியுள்ளார். ஏவஞ்ச, பூர்வகண்டத்தில் பிராட்டிக்குப் புருஷகாரத்வேக மட்டும் உத்தேச்யத் வமும், உத்தரகண்டத்தில் கைங்கர்ய தசையில் அவளுக்கு எம்பெருமானோடு சேர்த்தியும் பூர்வாசார்யா பிமதம் என்பது விளக்கப்பட்டதாயிற்று. பிராட்டிக் குப் புருஷகாரத்வமென்பது தவிர்க்க முடியாததொரு தன்மை. "लक्ष्मीः पुरुषकारत्वे निर्दिष्टा परमर्षिभिः । ममापि च मतं ह्येतत् नान्यथा लक्षणं भवेत्——லக்ஷ்மீ: புருஷகாரத்வே நிர் திஷ்டா பரமர்ஷிபி:, மமாபீச மதம் ஹ்யேதத் நாந்யதா லக்ஷணம் பவேத்" என்கிற பகவத் வசனத்தைப் பூர்வாசாரியர்கள் எடுத்துக் காட்டியுள்ளார்கள். பட்டர் ஸ்ரீகுண ரத்ந கோசத்தில் "பிதேவ த்வத்ப்ரேயாந் ஜநநீ—पितेव त्वत्प्रेयान् जननि" இத்யாதி ச்லோகத்தாலே பிராட்டியின் புருஷகாரக்ருத்ய ப்ரணாளியை உபபா தித்திருப்பதாக வேதாந்த வாசிரியரும் எடுத்துக் காட்டியுள்ளார்.

9. புருஷகாரத்வமும் உபாயத்வமும் ஒரே வ்யக்தி பக்கலில் ஒன்று கூடி யிருப்பது அஸம்பாவிதம். புருஷ காரத்வமாவது சிபார்சு செய்கை. உபாயத்வமாவது தானே கொடுக்க சக்தியுற்றிருக்கை. ஒரு பொருளை ஒருவன் தானே கொடுக்க சக்தனுயிருந்தானுகில் அவன் அந்தப் பொருளைக் கொடுப்பிக்க வேறொருவரிடத்தில் மன்றுடுவது அஸம்பாவிதம். கோவில் கட்டுவது, குளம் வெட்டுவது, சத்திரம் கட்டுவது முதலான தரும காரியங்களுக்காக ஒருவர் பொருள் யாசிக்கிறார். அப் பொருளைப் பரிபூர்ணமாகக் கொடுக்க ஒருவரே சக்தரா யிருந்தால் தானே கொடுத்துக் காரியத்தை நிறை வேற்றுகிறார். சக்தியற்றவராயிருந்தால் ஆப்தர்களி டத்தில் சிபார்சு செய்கிறார் தாம் சிறிது கொடுத்துப் பிறரிடம் சிபார்சும் செய்வாருமுளர். ஆனல் தாம் கொடுக்கும் பொருள் எதுவோ அதற்கே பிறரிடம் சிபார்சு செய்வதென்பது அஸம்பாவிதம். மோக்ஷமா கிற புருஷார்த்தத்தைக் கொடுக்கப் பிராட்டி தானே ஸ்வயம் சக்தையாகில் அந்த சக்தி அவளுக்குப் புஷ்கல மாயிருக்குமாகையாலே நிக்ரஹாதீநனாய் தண்டதர னான எம்பெருமானிடத்தில் தான் மன்றுடாமல் *நித்ய

மஜ்ஞாத நிக்ரஹேச்சையாய் அநுக்ரஹமயியானதானே கொடுத்து மகிழ என்ன தடை? ஒரு தடையுமிருக்க ப்ரஸக்தி யில்லை. இவள் புருஷகார க்ருத்யத்தில் ளென்றுகிறாள் என்பதாக சாஸ்த்ரங்கள் கோஷித்திருப் பதைக் கண்டவுடனே இவளுக்கு உபாயத்வத்தில் அந் வயமில்லை என்று அறுதியிடத் தட்டில்லையாயிருந் தது. இங்ஙனே அறுதியிட்ட ஆசிரியர்களில் தலைவர் வேதாந்தவாசிரியராவர். அவர் தென்மொழியிலும் வட மொழியிலும் அருளிச் செய்திருப்பவை காணீர்;—

10. ரஹஸ்ய ரத்நாவலி யென்றருளிச்செய்த பதின் மூன்றுவது ரஹஸ்யத்தில் நான்காவது வாக்கியம்— "ஸர்வஸ்வாமிநியாய் ஸர்வேச்வரனுக்கு சேஷமாய் ஸஹதர்மசாரிணியான பெரிய பிராட்டியார் இத்தலை யில் வாத்ஸல்யாதிசயத்தாலும் அத்தலையில் வால்லப் யாதிசயத்தாலும் புருஷகாரமாய்க் கொண்டு இஜ்ஜீவர் களுக்குத் தஞ்சமாகிறாள்" என்பது. இந்த ரஹஸ்யத் திற்குத் தாமே வியாக்கியானமாகப் பணித்த ரஹஸ்ய ரத்நாவளீ ஹ்ருதயமென்னும் அடுத்த ரஹஸ்யத்திலே இந்த வாக்கியத்தை விரிவாக வியாக்கியானித் தருளு கையில் முடிவாக வருளியது—'......பிராட்டி ஸாப ராதரானவர்களெல்லாருக்கும் சாஸிதாவான ஸர்வேச் வரன் அபிமதம் கொள்ள மாட்டாதே தயங்காதபடி அவ னுடைய பித்ருத்வப்ரயுக்தமான ஊஷ்மளீ பாவத்தை *உசிதைருபாயைர்விஸ்மார்ய उचितैरुपायैर्विस्मार्य* என்னும்படி யாக்கி இவர்களை அவன் திருவடிகளிலே சேர்த்து *தன்னடியார் திறத்தகத்துத் தாமரையாளாகிலும் சிதகுரைக்குமேல் என்னடியாரது செய்யார்* என்னும் படி பண்ணிக்கொண்டு *பவேயம் சரணம் ஹி வ:— भवेयं शरणं हि वः* என்றருளிச் செய்தபடியே இவர்க ளுக்கு ரக்ஷாஹேதுவாகிறாளென்றபடி" என்பதாம். இதில் "ரக்ஷாஹேது வாகிறாள்" என்றது மிகவும் குறிக்கொள்ளத்தக்கது. ரக்ஷை பண்ணுகிறவன் ஸர் வேச்வரனே யென்றும், புருஷகாரக்ருத்யமுகத்தாலே அதற்குத் தான் ஹேதுவாகிறாளத்தனை யென்றும் காட்டியவாறு.

11. அவ்வாசிரியர் தமிழில் இங்ஙனே யருளிச்செய்துள்ள வாக்கியங்கள் மற்றும் பல இருந்தாலும் இங்கு இவ்வளவு போதும். இனி வடமொழியில அவர் அருளியவற்றைக் காட்டுவோம். ஆளவந்தார் சதுச்ச்லோகியில் श्रेयो न ह्यरविन्दलोचनमनः कान्ताप्रसादादृते संसृत्यक्षर वैष्णवाध्वसु नृणां संभाव्यते कर्हिचित् = ச்ரேயோ ந ஹ்யரவிந்த லோசநமநः காந்தா ப்ரஸாதாத்ருதே ஸம்ஸ்ருத்யக்ஷர வைஷ்ணவாத்வஸு ந்ருணாம் ஸம்பாவ்யதே கர்ஹிசித்* என்றருளிச் செய்தார். இதனால் ஸ்ரீ மஹாலக்ஷ்மியின் அநுக்ரஹமில்லாமல் மோக்ஷ மார்க்கமுட்பட எந்த மார்க்கத்திலும் நன்மை கிடைக்காது என்று கூறப்படுகிறது. பிராட்டியின் அநுக்ரஹம் எவ்விதமாக நன்மை பயக்கிறது என்பதை விவரிக்க வேண்டி வந்தபடியாலே அவ்விடத்து பாஷ்யத்தில் இவ்வாசிரியர் தாமே விளக்கமாகவருளிச் செய்துள்ளார்—"मोक्षप्रदे भगवति मुमुक्षूणां घटकतया एषा तिष्ठतीति सर्वसम्मतम्— மோக்ஷ ப்ரதே பகவதி முமுக்ஷூணாம் கடகதயா ஏஷா திஷ்டதீதி ஸர்வஸம்மதம்" என்று. இந்த வாக்கியத்தினால் தெரிவிக்கப்படுவது என்னவெனில்; மோக்ஷமளிப்பவன் எம்பெருமான் தான்; பிராட்டி புருஷகாரமாக மட்டும் நிற்கிறாள் என்பது யாவருமிசைந்தது—என்பதாம்.

12. இதற்கு மேலும் அருளிச்செய்திருப்பது காணீர்: "परिपूर्णानुभवप्रदान संकल्पस्तु भगवतः स्वस्यैव वा, सपत्नीकस्यवेति यथाप्रमाणं भवतु; सर्वथा वैष्णवाध्वश्रेयः प्रदत्वमस्या इहोच्यमानं न विरुद्धम् —பரிபூர்ணாநுபவப்ரதான ஸம்கல்பஸ்து பகவதः ஸ்வஸ்யைவ வா ஸபத்நீகஸ்ய வேதி யதாப்ரமாணம் பவது; ஸர்வதா வைஷ்ணவாத்வச்ரேயः ப்ரதத்வமஸ்யா இஹோச்யமானம் ந விருத்தம்" என்று முடிக்கிறார். இதனால் சொல்லிற்றாகிறது என்னென்னில், முமுக்ஷுவுக்குப் பரிபூர்ணாநுபவத்தைக் கொடுப்பதாக ஸங்கல்பம் செய்வதுதானே உபாயக்ருத்யம்; அந்த ஸங்கல்பத்தை எம்பெருமான் தானே ஏகாகியாயிருந்து

செய்கிறானா அல்லது பிராட்டியோடு கூடியிருந்து செய்கிறானா என்பது ப்ரமாணம் தெரிவிக்கிற கட்டளையிலேயாகட்டும். மோக்ஷ மார்க்கத்திற்கு இவள் நன்மை செய்கிறாளென்று இங்குக் கூறியிருப்பது பொருந்தாமற் போக வழியில்லை—என்பதாம். மேலெடுத்த வாக்யத்தில் "பரிபூர்ணாநுபவமளிக்கைக்கீடான ஸங்கல்பம் எம்பெருமானுக்கு மட்டுமேயா? பிராட்டிக்குங் கூடவா?" என்று இங்ஙனே விகல்பிக்கவுங்கூட ஸஹியாதவர் இவ்வாசிரியர் என்பது முக்கியமாகக் குறிக்கொள்ளத்தக்கது. "யதாப்ரமாணம் பவது—यथाप्रमाणम् भवतु"—என்கையாலே இதில் நமக்கொரு விபரீத நிஷ்கர்ஷமில்லாமை காட்டப்பட்டது.

13. இந்த ப்ரகரணத்தில் ஸாரமாக அவர் பணித்ததொரு காரிகை காணீர்—अस्ति कर्मार्हफलदे पत्यौ कृत्यं द्वयं श्रियः। निग्रहाद्वारणं काले संधुक्षणमनुग्रहे—அஸ்தி கர்மார்ஹ பலதே பத்யௌ க்ருத்ய த்வயம் ச்ரிய:, நிக்ரஹாத் வாரணம் காலே ஸம்துக்ஷணமநுக்ரஹே" என்பதாம். இதன் பொருளாவது, எம்பெருமான் தான் கர்மாநுகுணமாகப் பலன் பெறுவிக்குமவன்; பிராட்டிக்கோவென்றால் இரண்டு க்ருத்யமுள்ளது, அவன் நிக்ரஹிப்பதாக இருக்குமளவில் உசிதோபாயங்களாலே அந்த நிக்ரஹத்தில் நின்றும் தடுப்பது ஒரு காரியம்; அவன் அநுக்ரஹாபிமுகனுமளவில் அவ்வநுக்ரஹத்தை மேன்மேலும் வளரச் செய்வது மற்றொரு காரியம் என்பதாம்.

14. கவிதார்க்கிக கேஸரியான ஆசார்யவர்யர் இவ்வளவு ஸ்பஷ்டமாக அருளிச் செய்திருக்கவும், சிலர் பிராட்டிக்கும் உபாயத்வத்தில் அந்வயமுண்டாக ப்ரமித்தோ, அல்லது நெடுநாள் ஊறியிருந்த ப்ரமம் நீங்கியும் அதை விடமாட்டாத வாஸனை கொண்டோ "மிதுனமே உபாயம்" என்றெழுதிப் போருவதோடு நில்லாமல் "இந்த அநுஷ்டானம்தானே 'உபாய வேளையோடு போக வேளையோடு வாசியற ஒரு மிதுனமே உத்தேச்யம்' என்ற ஒரு ஆசார்யச்ரேஷ்டருடைய பங்க்திக்குப்ரமாணம்" என்றெழுத முன்வந்தார்கள்.

15. இங்கே தத்வ ஜிஜ்ஞாஸுக்களுக்கு தத்துவ முணர்த்த வேண்டியது நமது கடமையாயிற்று. ஈடு முப்பத்தாறுயிரப்படி மஹாப்ரவேசத்தில் "ஆச்ரயண வேளையோடு போகவேளையோடு வாசியற ஒரு மிதுனமே உத்தேச்யமென்னுமிடம் சொல்லிற்றாயிற்று" என்கிற திவ்யஸூக்தியுள்ளது. உபாயவேளை யென்கிற அநந்விதமான வாக்கு கிடையாது; ஆச்ரயண வேளை என்பதே உள்ள வாக்கு. மருள் மலிகின்ற நந்தோ!. ஆச்ரயண வேளையில் ஒரு மிதுநம் உத்தேச்யமாகிறது எப்படி? போகவேளையில் அந்த மிதுனம் உத்தேச்யமாகிறது எப்படி? என்பதைக் கீழே பரக்க உபபாதித்தோம். வேதாந்த வாசிரியரின் திருவாக்குகள் கண்ணாடிபோல் காட்டியுள்ள விஷயமது. ஆச்ரயணவேளையில் பிராட்டியை உபாயமாகவல்லாமல் புருஷகாரமாகப் பற்றியே தீரவேண்டியிருக்கையாலே ஆச்ரயணத்தில் திவ்ய தம்பதிகளிருவரும் உத்தேச்யர் என்பதில் என்ன பிணக்கு?

16. உத்தர கண்டத்தில் சொல்லப்படுகிற கைங்கர்யத்திற்கு திவ்ய தம்பதிகள் உத்தேச்யராகிறுப் போலே, பூர்வகண்டத்தில் சொல்லப்படுகிற ஆச்ரயணத்திற்கும் திவ்ய தம்பதிகள் உத்தேச்யராவதில் என்ன தடை? ஆனால் ஒரு வாசியுள்ளது; எம்பெருமானுடைய ஆச்ரயணம் உபாயதயா; பிராட்டியினுடைய ஆச்ரயணம் புருஷகாரதயா. இந்த வாசியை ஸகலாசார்யர்களும், விசேஷித்து வேதாந்தவாசிரியரும் ஸ்பஷ்டமாகக் காட்டியிருக்க அபலாபம் செய்வதும். ஈட்டு ஸ்ரீஸூக்தியை மாறுபட உதாஹரிப்பதும் பெருந்தன்மையைப் போக்குமதாகும்.

17. குறளாசிரியர் "சொல்லுக சொல்லைப் பிறிதோர் சொல் அச்சொல்லை, வெல்லுஞ் சொல்லின்மை யறிந்து" என்று பாடியிருக்குங் குறளை மறக்கலாகாது. தத்துவப் பொருள்களை வெளியிடும்போது வாய்வந்தபடி சொல்லுவதும் கைபோனபடி யெழுதுவதும் தகாது தகாது. சிறிதாகவோ பெரிதாகவோ அபார்த்தம் எந்த மூலையிலிருந்து தோன்றினாலும் நமது வாழ்நாளில் அது பங்கமடையாதிருக்க முடியாது, பங்கமடைந்தே தீருமென்பது அப்ரதிஹத பகவத் ஸங்கல்ப ஸித்தம். புருஷகாரதயா நிஷ்கர்ஷம்

பெற்ற பிராட்டி திறத்தில் ஸர்வாத்மநா அஸம்பத்த மான உபாயத்வவாத மொன்று யார் செய்தாலும் எத்தனை வருஷ காலமாகத் தொடர்ந்து வந்தாலும் அது அஸாது, அத்யந்தமஸாது என்னத்தட்டில்லை.

18. ரஹஸ்யத்ரய ஸாரத்தில் த்வயத்தின் பூர்வகண்டத்தில் (ஸ்ரீமத்) என்றவிடத்தில் பிராட்டிக்கு உபலக்ஷணத்வமா? விசேஷணத்வமா? என்றொரு சர்ச்சையை வார்த்திக்கொண்டு உபலக்ஷணத்வமென்று சில ஆசார்யர்கள் சொல்லுவதாக வைத்து அதைக் கண்டித்து விசேஷணத்வமே யுக்தமென்று ஸ்தாபிக்கப்படுகிறது. அங்கு—"இப்படி மத்யஸ்த த்ருஷ்டியாலே ப்ராமாணிகார்த்தங்கள் தோற்றச் செய்தே பற்றினது விடாதொழியில் *த்ருட பூர்வச்ருதோ மூர்க்கோ தர்மாணுமவிசாரத:,......அந்யதா மந்தபுத்தீநாம் ப்ரதிபாதி" என்கிற தசையாம்" இத்யாதி ஸம்பாவனைகளோடே தலைக்கட்டியிருக்கிறது. இந்த ஸம்பாவனைகள் உண்மையில் யாருக்குச் சேருகின்றன வென்பதை விவேகிகள் விமர்சிக்க வேணும். இங்குப் பிராட்டிக்கு விசேஷணத்வ மில்லையென்று ஒரு பூர்வாசார்யரும் உரைத்ததில்லை. முமுக்ஷுப்படியில த்வயப்ரகரணத்தில் 'இப்போ திவனைச் சொல்லுகிறது புருஷகாரமாக" என்ற சூர்ணையின் வியாக்கியானத்திலே மணவாளமாமுனிகள் —"(புருஷகாரமாக) என்கையாலே உபாயவஸ்துவிசேஷணமாயிருக்கிற ஆகாரத்தையிட்டு இவனுக்கும் உபாயத்வத்தில் அந்வயம் சொல்லும் பக்ஷம் நிரஸ்தம்" என்றருளிச்செய்திருக்குமிடத்து பிராட்டிக்கு விசேஷணத்வத்தைக் கண்டோக்தியாகவே அருளிச்செய்திருப்பது காணலாம்.

19. இங்கு உபலக்ஷணத்வம் கொண்டாலும் விசேஷணத்வம் கொண்டாலும் வாசி சிறிதுமில்லையென்பதை சாஸ்த்ரமர்மஜ்ஞர்கள் உணருவார்கள். இதைப் பல நூல்களில் விசதீகரித்திருக்கிறோம். ரஹஸ்யத்ரய ஸாரத்திற்கு சாஸ்த்ரஜ்ஞர்கள் யாரும் வியாக்கியான மெழுதவில்லை. நவீன காலத்தில் சிறந்த சாஸ்த்ரஜ்ஞரான ஸ்ரீமத் பரமஹம்ஸ இஞ்சிமேட்ட ழகிய சிங்கர் எழுதி வெளியிட்டுள்ள வியாக்கியானத்தில் உண்மை வெளி வந்துள்ளது. அந்த இஞ்சிமேட்டு ஸ்வாமி நமது க்ரந்தங்களைப் பூர்வாச்ரமத்திலும் உத்த

ராச்ரமத்திலும் பூர்த்தியாகக் கடாக்ஷித்தவ ராகை யாலே நல்ல தெளிவுடன் எழுதியிருப்பதைக் கேளீர். அந்த ஸ்வாமியின் பதிப்பில் இரண்டாவது ஸம்புடத் தில் (பக்கம் 29ல்) விசேஷணத்வ உபலக்ஷணத்வங் கள் ஜந்மாத்யதிகரண ஸ்ரீபாஷ்யத்தில் விவரிக்கப்பட் டிருப்பதாக எடுத்துக் காட்டிவிட்டு அதற்குமேல் எழுதுகிறார் வித்வானான இஞ்சிமேட்டழகியசிங்கர்—

> "இந்த உபலக்ஷணத்வத்தை ப்ரக்ருதத்தில் பிராட்டி விஷயத்திலே ஏகதேசிகளும் சொல்லுகிறார்களில்லை, சொல்லவும் முடி யாது" என்று.

20. உண்மையில் நம்முடைய கிருபணங்கள் அசைக்க முடியாதவை யாதலால் இப்படி யெழுதித் தீரவேண்டியதாயிற்று அவர்க்கு. ஆனாலும் தாம் வியாக்கியானம் செய்ய இழிந்தவராகையாலே மூலத் தைத் தாமே கண்டித்துவிட்டால் நன்றாயிராதே; ஒருவாறு பொருந்த விடவேணுமென்று மிகவும் சிர மப்படுகிறார் பாவம்! உபலக்ஷணத்வ விசேஷணத் வங்களை இப்படிச் சொல்லலாமென்று ஒருவழியில் நுழைகிறார். எந்த வழியில் நுழைந்தாலும் "உய்யும் வகையில்லை தொண்டீர்" என்று நம்மாழ்வார் அருளிச் செய்தபடியல்லது வேறுண்டோ? கீழே உதா ஹரித்த மணவாளமாமுனிகளின் ஸ்ரீஸூக்தி *अल्पाक्षर मसंदिग्धं सारवत्* என்றாற்போலன்றோ வுள்ளது. நீதிமன் றங்களில் பல பேர்கள் ஜட்ஜ் ஸ்தானம் வஹிப்ப துண்டே: "இவர் எழுதி வைத்த ஜட்ஜ்மெண்டு எங் குப் போனாலும் மாறாது" என்னும்படியான ஏற்றம் எல்லா ஜட்ஜ்களுக்கும் கிடைத்து விடுமா? அப்படிப் பட்ட பாக்யசாலி யாரோ வொருவரன்றோ. அதுபோல மணவாளமாமுனிகள் ஸாதித்த நிஷ்கர்ஷமென்றால் "பேசியிருப்பனகள் பேர்க்கவும் பேராவே" என்று ஆண்டாளருளிச் செய்தபடியன்றோ விருப்பது. பிறர் வளவளவென்று எத்தனை பக்கம் எழுதி வைத்தாலும் விசதவாக் சிகாமணிகள் எழுதும் ஒரு வரியின் கீழே அத்தனையும் வழவழவென்றாகு மென்பது அபிமானத் தால் சொல்லுவதன்றே. இதில் தோஷம் சொல்ல நினைப்பவர்கள் "ஸித்தஸாதநம் தோஷ:," என்னலா

மத்தனை போக்கி வேறொன்றும் சொல்லப்போகாது. இது நிற்க.

21. "த்ருட பூர்வச்ருதோ மூர்க்க: ...... என்கிற தசையாம்" என்றவிடத்தில்—"இப்படி மத்யஸ்த த்ருஷ்டியாலே ப்ராமாணிக கார்த்தங்கள் தோற்றச் செய்தே பற்றினது விடாதொழியில்" என்றிருக்கிறதல்லவா; இதில் இரண்டு கேள்விகள் (1) மத்யஸ்த த்ருஷ்டியாலே பிராமாணிகார்த்தங்கள் தோற்றியிருப்பதாகச் சொல்லப்படுகிற அர்த்தங்கள் எவை? (2) பற்றினது விடாமல் பிறர் பிடிவாதமாகச் சொல்லும் அர்த்தம் எது? ஆக இவ்விரண்டு கேள்விக்கும் விடை வெளிவருமா? இந்த யுகத்தில் வெளிவராதென்று சபதம் செய்திருக்கிறோம். நம்மைத் தூக்கி யெறிந்தாப் போல பதில் எழுதவேணுமே யிவர்கள். "இப்படி மத்யஸ்த த்ருஷ்டியாலே" என்பதற்குக் கீழ் 'வேரி மாறாத பூமேலிருப்பாள்—நின் திருவருளும் பங்கயத்தாள் திருவருளுங் கொண்டு — நின் திரு — திருவுக்குந் திரு — தாமரையாள் கேள்வனொருவனையே நோக்குமுணர்வு" இத்யாதிகளான ஆழ்வார் பாசுரங்களும் "ச்ரேயோ நஹ்யரவிந்த லோசந" "ஜகத் ஸமஸ்தம் யதபாங்க ஸம் ச்ரயம்" "சேஷ சேஷாசநாதி ஸர்வம் பரிஜநம்" "ஸ்வஸ்தி ஸ்ரீர்திசதாத்" "ஐச்வர்ய மக்ஷரகதிம்" ஸ்வத: ஸ்ரீ ஸ்த்வம்" இத்யாதி ஆசார்ய ஸூக்திகளும் "லக்ஷ்ம்யா ஸஹ ஹ்ருஷீகேச:" "ப்ரபத்யேங்கியத: ச்ரியம்" "அலமேஷா பரித்ராதும்" "ஆத்ம வித்யாச" இத்யாதிகளான பாஞ்சராத்ர புராணேதிஹாஸ ச்லோகங்களும் அடுக்கப்பட்டிருக்கின்றன. "மோக்ஷப்ரதே பகவதி இயம் கடகதயா திஷ்டதி" "இவள் புருஷகாரமாய்க் கொண்டு தஞ்சமாகிறான்" இத்யாதிகளைத் தாமே யருளிச் செய்தபோது இந்த பிரமாணங்களெல்லாம் எங்கே புக்கொளித்தனவோ? ஒருவர் விஷ்ணுபாரம்யம்சொல்லுவதாகத் தொடங்கி "விஷ்ணுர் நாராயண: க்ருஷ்ண:" என்று அமரகாரன் சொல்லியிருப்பதாலும் 'விஷ்ணவே ஸர்வஜிஷ்ணவே' என்றும் 'ஓம் நமோ விஷ்ணவே ப்ரபவிஷ்ணவே" என்றும் "ஸ்ரீ மஹாவிஷ்ணும் த்யாயாமி" என்றும் "விஷ்ணோராயதநே வஸேத்" என்றும் "விஷ்ணு பாதே தத்தம்" என்றும் "வல்லனெம்பிரான் விஷ்ணுவே" என்றும் முறையிடுகையாலும் விஷ்

னுவே பராத்பர னென்பதில் என்ன ஸந்தேஹம்? விஷ்ணுவுக்குப் பாரம்யமில்லையாகில் 'விஷ்ணும் தர்ப்பயாமி' என்று சொல்லித் தர்ப்பணம் பண்ணமுடியுமோ? என்றும் இப்படி நினைவுக்கு வருவதை யெல்லாம் சொல்லிக்கொண்டிருப்பராம். அதனில் இதற்கு வாசியொன்றில்லையே! உண்டெனில் உரையீர்.

22. "ஸ்ரீஸூக்த பாஷ்யத்திலே பெரியஜீயரும் அபேக்ஷிதார்த்தங்களெல்லாம் உபபாதித்தார்" என்கிறார். என்ன அர்த்தம் அபேக்ஷிதமோ? அதை எப்படி உபபாதித்தாரோ? இஞ்சிமேட்டழகியசிங்கர் பெரிய வித்வான்; வியாக்கியானம் பண்ண இழிந்த அவராவது விவரிக்கவேண்டாமா? நஞ்சீயர் ஸாதித்த ஸ்ரீஸூக்தபாஷ்யமென்று ஒன்று அச்சில் வந்திருக்கிறதே, அதை அந்த ஸ்வாமி கடாக்ஷியாதவரல்லரே. அதில் உபபாதித்த அபேக்ஷிதார்த்தங்களில் சிலவற்றையாவது எடுத்துக் காட்டக்கூடாதா? பெரிய ஜீயரும் என்பதற்கு "நாராயணமுனி யென்கிற நஞ்சீயரும்" என்று பொருளுரைத்தார். இதுதான் இங்கு அவசியமான விவரணம் போலும். அந்த நஞ்சீயர் என்ன உபபாதித்தாரென்பதை அடியோடு காட்டாமல் தாம் ஒரு அபூர்வமான ப்ரமாணம் காட்டி வெற்றிக் கொடி நாட்டுகிறார். அது என்னவென்னில்; "இங்கு ஸ்வயம் வஸ்துராகுர்வந்...பத்மாயாஸ் தவச சரணௌ நச்சரணயந்" என்று பட்டர் ஸ்ரீலக்ஷ்மீ கல்யாணத்தில் நம்மாழ்வார் பாசுரத்திற்கு அர்த்தமாக அருளிச்செய்த ஸ்தோத்ரத்தின் ச்லோகாதிகளும் அநுஸந்தேயங்கள். இதில் பெருமாளுடையவும் பிராட்டியினுடையவும் திருவடிகளுக்கே உபாயத்வம் ஸ்பஷ்டமாகச் சொல்லப் பட்டதிறே." என்றெழுதியுள்ளார் இஞ்சிமேட்டழகிய சிங்கர். பிராட்டியை மட்டும் தனியே விளித்து உமது திருவடிகளை சரணமாகப் பற்றுகிறேன் என்று இட்ட ச்லோகங்கள் பதினாயிரக்கணக்காக இல்லையா? பகவந் நாராயணேத்யாதி சரணாகதிகத்ய சூர்ணையில் 'சரணௌ சரணம் ப்ரபத்யே'' என்றிருப்பது ஒன்று போராதா உங்களுக்கு வெற்றிக்கொடி நாட்டுவிக்க? ஸுப்ரஸித்தமானதை விட்டு அப்ரஸித்தமான தொன்றைத் தேடிப்பிடித்து ப்ரஸங்கிப்பது என்னோ? "சரணம் ப்ரபத்யே" என்னப்பெறுகிற வ்யக்திகளுக்கெல்லாம்

மோக்ஷப்ரதத்வம் வந்துவிட்டதாக எண்ணமோ? அவரவர்கள் தம் தம் ஆசாரியர்களுக்குச் செய்துகொள்ளும் தனியன்களில 'சரணம் ப்ரபத்யே' இல்லாத தனியன் தேடிப்பிடிக்க வேண்டியதாகவன்றோ விருக்கும். இவர்களெல்லோரும் மோக்ஷப்ரதர்களாகும்போது பிராட்டிதானு மோக்ஷப்ரதையாக ஆகக்கூடாது?

23. உபஸம்ஹாரம்

வேதாந்தவாசிரியர் ஊர்ஜிதமாக ஸ்தாபித்த அர்த்தங்கள்

(1) பகவத்க்ருபை நிர்ஹேதுகம் (2) சேதனனைப் பெறுவது ஈச்வரனுக்குப் பேறு, (3) பரகத ஸ்வீகாரமே நன்று, (4) ப்ரபத்தி உபாயமன்று. (5) பிராட்டிக்குப் புருஷகாரத்வமே யுள்ளது. (6) பிராட்டிக்கு ஜகத்காரணத்வமில்லை. (7) பிராட்டிக்கு ஜீவகோடி ப்ரவேசவாதம் மறுக்கத்தக்கதன்று. (8) எம்பெருமானுடைய வ்யாப்தி வஸ்துதோறும் பரிஸமாப்ய வர்த்தகம். (9) ஜாதி நசிக்கும். (10) உபாயாந்தரங்கள் ஸ்வாதிகார விருத்தம் (11) த்வயோச் சாரணாநுச்சாரணத்தாலே ப்ரபத்த்யநுஷ்டானம் பிறந்து விட்டது. (12) நாஸிகாஸம்பந்தமற்ற திருமண்காப்பு அசாஸ்த்ரீயம்.

24. ஆக இவ்வர்த்த விசேஷங்கள் அவ்வாசிரியருடைய க்ரந்தங்களில் பேர்க்கவும் பேராதபடி விளங்குமவை. இவை நவீனர்களுக்கு விஷமாயிருக்கின்றன. கைவல்ய விஷயத்தில் கீதாபாஷ்ய ஸ்ரீஸூக்திகளில் அஸ்வாரஸ்ய மேறிட்டும், பிராட்டியின் விஷயத்தில் தாமே பலவிடங்களில் கல்வெட்டாகக் கூறின விஷயங்களைக் கண்டிக்கிற ரீதியில் "த்ருட பூர்வச்ருதோ மூர்க்க:" இத்யாதிகளான உபாலம்பங்களை அஸ்தானே பரப்பியும், பகவத் வ்யாப்தி விஷயத்தில் ந்யாய ஸித்தாஞ்ஜனத்தில் நிஷ்கர்ஷித்தபடிக்கு முரணாக ரஹஸ்யத்ரய ஸாரத்தில் எழுதி வைத்தும்......இப்படியாகவுள்ள ஸ்வல்ப விஷம விஷயங்களைக் காணக்கண்ணிட்டிருக்க வேண்டியிருக்க, கடுகான விவற்றை மலையாக்கிக் கொண்டு போவது மிகவும் தகுதியற்றதென்று ஹிதமுரைத்து நிற்கிறோம் ... ...

முற்றிற்று.